# கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு

## செயலாற்றுகை அறிக்கை

## 2018.07.01-2018.09.30

கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு
இல 35 ஏ,
கலாநிதி என் எம் பெரேரா மாவத்தை
கொழும்பு - 08

## நோக்கம்

பொது மக்களுக்கான கடப்பாட்டுக்கும் பொறுப்புக் கூறலுக்குமான அர்பணித்த உயர்தரமான கணக்காய்வுச் சேவை

## குறிக்கோள்

தொழில்சார் நிபுணத்துவம்,தேர்ச்சி மற்றும் புத்தாக்கத்துடன் கூடிய நல்லாட்சியை அடிப்படையாகக் கொண்ட அரச கணக்காய்வு சேவையினை நிறுவுவதன் மூலம் அரச உடமைகளுக்கு பொறுப்புக்கூறல்.

## மதிப்பீடுகள்

- சுயாதீனத் தன்மை
- நாடு நிலைமை
- நேர்மை
- புத்தாக்கம்
- வெளிப்படைத் தன்மை
- பொறுப்புக் கூறல்
- தொழிற் திறன்

## உள்ளடக்கம்


| தொடர் இல | விடயம் | பக்கம் |
|---|---|---|
| **1.** | அறிமுகம் | **1** |
| **2.** | கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் பணிகள் | **1-2** |
| 2.1 | அரசியலமைப்பின் *153* இ மூலம் உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகள் | **1** |
| 2.2 | *2018.08.01* ஆம் திகதியிலிருந்து நடை முறையில் உள்ள *2018* இல 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் மூலம் உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகள் | **1-2** |
| **3.** | கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் *2018.07.01* ஆம் திகதி முதல் *2018.09.30* வரையிலான செயலாற்றுகை | **2-4** |
| 3.1 | அரசியலமைப்பின் *153* இ மூலம் உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பிலான அடைவுகள். | 2 |
| 3.2 | நிருவாக மற்றும் நிதி அடைவுகள் | 3-4 |
| 3.3 | கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அமர்வுகள் | 4 |
| **4.** | பணியாளர்கள் தொகுதி | **5** |
| 4.1 | பணியாளர்களின் பயிற்சி | 6 |
| **5.** | இணைப்பு | 7-8 |
| | 1. *2018.01.01* திகதி தொடக்கம் *2018.09.30* ஆம் திகதி வரையிலான நிதி அடைவுகள் | 7 |
| | 2. கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அமைப்பு அட்டவணை | 8 |

# கணக்கையிவு சேவைகள் ஆணைக்குழு

## 1. அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ***XVII***ஆம் பிரிவின் ***153*** அ***(1)***இன் பிரகாரம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது.

## 2. ஆணைக்குழுவின் கடமைகளும் பொறுப்புக்களும்.

**2.1** அரசியலமைப்பின் 153 (இ) பிரிவின் படி உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகளும் பொறுப்புக்களும்.

*I.* இலங்கை அரச கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அங்கத்தினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும்பதவி நீக்கும் அதிகாரம்.

*II.* இலங்கை அரச கணக்காய்வு சேவைக்குரிய அலுவலர்களினது ஆட்சேர்ப்புத்திட்டம், நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை, பனி நீக்கம் சம்பந்தமான சட்ட திட்டங்களை உருவாக்குதல்.

*III.* சட்டத்தினால் உருவாக்கப்பட்ட கணக்காய்வு சேவையின் வருடாந்த மதிப்பீட்ட்டை தயார் செய்தல்.

*IV.* மேலும் சட்டத்தினால் உருவாக்கப்பட்டு ஒப்படைக்கப்படும் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கும் நடைமுறைப் படுத்துவதற்குமான அதிகாரம்.

**2.2 2018.08.01ஆம் திகத்யிளிருந்து நடைமுறையில் உள்ள 2018 19 /ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகள்.**

***I.*** இலங்கை கணக்காய்வு நியமங்களில் நிறைவேற்றுகைக் கணக்காய்வுகள், சூழல் கணக்காய்வுகள்,தொழில் நுட்பக்கணக்காய்வுகள் மற்றும் வேறு விசேட கணக்காய்வுகளுக்காகக் கணக்காய்வு நியமங்கள் குறித்துரைக்கப்படாதுவிடத்து கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவானது அத்தகைய கணக்காய்வுகளுக்கு ஏற்புடையனவாக வேண்டிய உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச ஒழுங்கமைப்பினால் தீர்மானிக்கப்பட்ட உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களின் ஏற்பாடுகளை,உள்ளூர் தேவைப்பாடுகளுக்கு ஏற்றால்போல அவசியமான திருத்தங்களுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்துரைத்தல்.

***II.*** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் வேறுவகையாகக் குறிப்பாக குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய,கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவானது கணக்காய்வுக்குட்படு உருவகமொன்றின் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களினதும் குறைபாட்டின் அல்லது இழப்பின் பெறுமதி மீது மிகைக் கட்டணமொன்றை

விதிப்பதற்காக அத்தகைய கொடுக்கல் வாங்கல் ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக செய்யப்பட்டுள்ளதென்றும் அக்கொடுக்கள் வாங்கலில் சம்பந்தப்பட்டோரின் மோசடி ,அசட்டை,கையாடல் அல்லது ஊழல் காரணமாக ஏதேனும் குறைபாடு அல்லது இழப்பு விளைந்துள்ளதென்றும் நம்புவதற்கு கணக்காய்வு சேவை ஆணைக்குழு நியாயமான ஏத்துக்களைக் கொண்டிருக்குமிடத்து அக்கணக்காய்வுக்குட்படு உருவாக்கத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அறிக்கையிடுதல்.

**III.** ஆணைக்குழுவின் அலுவல்களில் உதவுவதற்கு குழுக்களை நியமித்தல்.

**IV.** தேசிய கணக்காய்வு அலுவலகப் பணியாட் தொகுதியினரின் நிறைவேற்றுகைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை அமுல் படுத்துதல்.

**V.** கணக்காய்வு சட்டத்தில் கூறப்பட்டுள்ள சட்ட விதிகளை உருவாக்குதல்.

**VI.** அரச கணக்காய்வு பயிற்சி நிலையத்தின் முகாமைக்குத் தேவையான சட்ட திட்டங்களை உருவாக்குதல்.

## 3. கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் 2018.07.01 ஆம் திகதி தொடக்கம் 2018.09.30 ஆம் திகதி வரையிலான அடைவுகள்.

### 3.1அரசியலமைப்பின் 153 இ உறுப்புரையின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பிலான அடைவுகள்.


| இலக்கம் | அதிகாரம் | அடைவுகள் |
|---|---|---|
| 1 | இலங்கை அரச கணக்காய்வு சேவைக்குரிய அங்கத்தினர்களின் நியமனம், பதவியுயர்வு,இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை, பதவி நீக்கம் | I. இலங்கை அரச கணக்காய்வு சேவையின் பிரமானக் குறிப்பு வரைப்பிற்கேற்ப முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின், தேசிய சம்பள ஆணைக்குழுவின் மற்றும் தப்பான பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசினை பெற்றுக்கொண்டு அச் சிபாரிசினை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு கணக்காய்வு தலைமை அதிபதியினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.<br>II. தேசிய கணக்காய்வு செயலகத்தின் இரண்டு பிரதி கணக்கைவாளர் தலைமை அதிபதிகள் ஓய்வு பெறுவதற்கு அனுமதி பெற்றுக்கொடுத்தல் |
| 2 | தேசிய கணக்காய்வு செயலகத்தின் வருடாந்த மதிப்பீட்டை தயார் செய்தல் | 2019ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை மதிப்பாய்வு செய்து அதனை கௌரவ சபாநாயகர் அவர்களுக்கு அனுப்பியமை. |


### 3.2 நிருவாக மற்றும் நிதி அடைவுகள்


2018ஆம் ஆண்டுக்காக கணக்காய்வு சேவைகள் அணைக்குழுவிற்கு மீண்டெழும் செலவிற்காகவும் மூலதன செலவிற்காகவும் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் 2018.07.01 ஆம் திகதி தொடக்கம் 2018.09.30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மீண்டெழும் செலவிற்காக 7,115,844.62 ரூபாவும் மூலதன செலவிற்காக 545,194.32 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது

**நிதி அடைவுகளின் சாராம்சம் - 2018.01.01 தொடக்கம் 2018.09.30 வரை**

| | ஒதுக்கம் ரூபா (2018 வருடம்) | மொத்தச் செலவு (2018.01.01-2018.09.30) ரூபா, | மீதி (2018.09.30 ஆம் திகதியன்று) ரூபா. |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவு | 44,322,000.00 | 27,974,294.96 | 16,347,705.04 |
| மூலதனச் செலவு | 1,885,000.00 | 712,674.82 | 1,172,325.18 |
| மொத்தம் | **46,207,000.00** | **28,686,969.78** | **17,520,030.22** |






.2018.01.01ஆம் திகதி முதல் 2018.09.3 0ஆம் திகதி வரையிலான காலப்பகுதியின் நிதி அறிக்கை இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளது.

### 3.3 ஆணைக்குழுவின் அமர்வுகள்

2018.09.30 – 2018.07.01ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் (05) சபை அமர்வுகள் நடை பெற்றுள்ளது.

## 1. பணியாளர் குழாம்

கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 43 ஆகும்.

| கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட, தற்போது உள்ள மற்றும் வெற்றிடம் சம்பந்தமான விபரம் ஆம் திகதியன்று | | | | |
|---|---|---|---|---|
| **பதவி மட்டம்** | **பதவி** | **அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை** | **சேவையில் உள்ள எண்ணிக்கை** | **வெற்றிடம்** |
| **சிரேஷ்ட மட்டம்** | செயலாளர் | 10 | 02 | 08 |
| | மேலதிகச் செயலாளர் | | | |
| | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | | | |
| | பணிப்பாளர் | | | |
| | உதவிச் செயலாளர் | | | |
| | உதவிப் பணிப்பாளர் | | | |
| | கணக்காய்வு அத்தியட்சகர் | | | |
| | கணக்காளர் | | | |
| | சட்ட அலுவலர் | | | |
| மூன்றாம் நிலை மட்டம் | நிருவாக உத்தியோகத்தர் | 05 | 02 | 03 |
| | மொழி பெயர்ப்பாளர் | | | |
| | தகவல் தொழில் நுட்ப அலுவலர். | | | |
| இரண்டாம் நிலை மட்டம் | தகவல் தொழில் நுட்ப உதவியாளர் | 16 | 09 | 07 |
| | அரச முகாமைத்துவப் பணிப்பாளர் | | | |
| ஆரம்ப மட்டம் | சாரதி | 12 | 9 | 03 |
| | காரியாலய உதவியாளர் | | | |
| **மொத்தம்** | | **43** | **22** | **21** |

கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அமைப்பு அட்டவணை இணைப்பு *02* இல் காட்டப்பட்டுள்ளது.

### 4.1 பணியாளர்களின் பயிற்சி

*கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டின் மூன்றாம் நிதியாண்டில் கீழ் காணப்படும் வகையில் உத்தியோகத்தர்களை பயிற்சி நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர்,*

| | **பயிற்சியின் பெயர்** | **பதவி** | **அலுவலர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | அரச கொள்முதல் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் சம்பந்தமான உயர் தேசிய டிப்ளோமா | கணக்காளர் | 01 |
| 2 | ஜூனியர் நிருவாகிகளுக்கான ஆங்கில டிப்ளோமா பாட நெறி (அரச முகாமைத்துவ உதவியாளர் ,அபிவிருத்தி உத்தியோகத்தர்) | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 3 | சாரதிகளின் கடமைகளும் மற்றும் பொறுப்புக்களும் | சாரதி | 01 |
| 4 | இலங்கை கணக்காளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான திறனை வளர்ப்பதற்கான பயிற்சித் திட்டம் | கணக்காளர் | 01 |
| 5 | கூகள் உடன் டிஜிட்டல் மயப்படுத்துவது எவ்வாறு என்பது சம்பந்தமான செயலமர்வு | தகவல் தொழில் நுட்ப அலுவலர். | 01 |
| 6 | சிகாஸ் பயிற்சி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |

இணைப்பு 01

| விடய இலக்கம் | விபரம் | வருடாந்த ஒதுக்கம் - 2018 | மேலதிக ஒதுக்கம் - 2018 | நி.பி 66 மாற்றுதல் 2018 | அனுமதிக்கப்பட்ட மொத்த ஒதுக்கம் - 2018 | செலவுகள் 2018-07-01 தொடக்கம் 2018-09-30 வரை | செலவு 2018-01-01 தொடக்கம் 2018-09-30 வரை |
|---|---|---|---|---|---|---|---|
| | **கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு** | | | | | | |
| | **மொத்த ஒதுக்கங்களும் செலவுகளும் 2018 -01 -01 திகதி தொடக்கம் 2018-09-30 திகதி வரை** | | | | | | |
| | | ரூபா . | ரூபா . | ரூபா . | ரூபா . | ரூபா . | ரூபா . |
| **23-01-01** | ***மீண்டெழும் செலவு*** | **44,322,000.00** | - | - | - | **7,115,844.62** | **27,974,294.96** |
| | **தனிப்பட்ட ஊதியங்கள்** | **22,000,000.00** | | | | **3,897,532.65** | **11,423,476.02** |
| 1001 | சம்பளம் மற்றும் ஊதியங்கள் | 15,000,000.00 | | | | 1,909,891.92 | 5,637,494.32 |
| 1002 | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் | 1,000,000.00 | | | | 21,387.26 | 91,018.35 |
| 1003 | ஏனைய கொடுப்பனவு | 6,000,000.00 | | | | 1,966,253.47 | 5,694,963.35 |
| | **போக்குவருத்துச் செலவு** | **1,100,000.00** | | | | - | **2,187,100.50** |
| 1101 | உள்நாட்டு | 100,000.00 | | | | - | - |
| 1102 | வெளிநாட்டு | 1,000,000.00 | 1,000,000.00 | 200,000.00 | | - | 2,187,100.50 |
| | **விநியோகம்** | **1,972,000.00** | | | | **209,851.26** | **464,988.03** |
| 1201 | காகிதாதிகள் மற்றும் காரியாலயச் செலவு | 1,000,000.00 | | | | 51,450.00 | 57,825.00 |
| 1202 | எரிபொருள் விநியோகம் | 700,000.00 | | | | 118,457.70 | 291,180.30 |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 272,000.00 | | | | 39,943.56 | 115,982.73 |
| | **பராமரிப்புச் செலவு** | **900,000.00** | | | | **54,774.15** | **340,895.33** |
| 1301 | வாகனம் மற்றும் பராமரிப்பு | 700,000.00 | | (200,000.00) | 500,000.00 | 17,559.00 | 303,680.18 |
| 1302 | இயந்திர உபகரணம் பராமரிப்புச் செலவு | 200,000.00 | | | | 37,215.15 | 37,215.15 |
| | **சேவைகள்** | **16,950,000.00** | | | | **2,885,423.57** | **13,333,388.27** |
| 1401 | போக்குவருத்துச் செலவு | 1,200,000.00 | | | | 453,750.00 | 1,053,750.00 |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் செலவு | 1,500,000.00 | | | | 206,143.12 | 576,884.95 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் செலவு | 720,000.00 | | | | 56,899.15 | 197,092.45 |
| 1404 | வரி மற்றும் உள்நாட்டு வரி | 10,530,000.00 | | | | 1,636,363.55 | 9,869,318.05 |
| 1409 | வேறு செலவு | 3,000,000.00 | | | | 532,267.75 | 1,636,342.82 |
| | **மாற்றுதல்** | **1,400,000.00** | | | | **68,262.99** | **224,446.81** |
| 1505 | நலன்புரி பணம் | 100,000.00 | | | | - | - |
| 1506 | அரச ஊழியர்களுக்கான நிலையான கடன் வட்டி | 1,300,000.00 | | | | 68,262.99 | 224,446.81 |
| **23-01-01** | ***மூலதச் செலவு*** | **1,885,000.00** | - | - | - | **545,194.32** | **712,674.82** |
| | **நிலையான சொத்துக்களை புனர் நிருமானம் மற்றும் மேம்படுத்தல்** | **400,000.00** | | | | **185,149.32** | **185,149.32** |
| 2001 | கட்டிடம் மற்றும் நிருமானம் | 200,000.00 | | | | 185,149.32 | 185,149.32 |
| 2003 | வாகனம் | 200,000.00 | | | | - | - |
| | **மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல்** | **1,000,000.00** | | | | **206,545.00** | **253,775.50** |
| 2102 | மனை உபகரணம் மற்றும் காரியாலய உபகரணம் | 1,000,000.00 | | | | 206,545.00 | 253,775.50 |
| | **மனித வள அபிவிருத்தி** | **485,000.00** | | | | **153,500.00** | **273,750.00** |
| 2401 | ஊழியர்கள் பயிற்சி | 485,000.00 | | | | 153,500.00 | 273,750.00 |
| | **மொத்தம்** | **46,207,000.00** | - | - | - | **7,661,038.94** | **28,686,969.78** |

★ **காரியாலய அறைகளை பிரிப்பதற்காக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திற்கு பண ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .**
**பெறுமதி ரூபா . 185,149.32**

இணைப்பு 02

## 4.2 *கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அமைப்பு அட்டவணை*

